
# போது



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
13/09/04
நூலகம்

புத்தகங்கள் படிப்போம்
புது உலகம் காண்போம்
சத்தமின்றி நூறு
சாதனைகள் புரிவோம் !



எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

_ மகாகவி பாரதியார் _

விலை 10/=

ஆண்டுச் சந்தா 100/=

வெளியீடு :
**PROFESSIONAL PSYCHOLOGICAL COUNSELLING CENTRE**
**BATTICALOA.**

# போது

போது -6 இதழ் -38

ஆடி- ஆவணி 2004
தோற்றம் 5-5-1998

நிர்வாக ஆசிரியர்
(Managing Editor)
சுவாமிஜி
போல் சற்குணநாயகம்.பே.ச.

ஆசிரியர்
(Editor)
வாகரைவாணன்

நிர்வாகம்:
(Management)
சி.எம்.ஒக்கஸ்

பணிமனை:
ஜெஸ்கொம்அச்சகம்,
இல. 1, யேசுசபை வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி:
065-2223822, 065-2222983

E-mail
ppcc@diamond.lanka.net

ஆசிரியர் பக்கம்

# NOR+ WAY

அலைகடல் தாலாட்டி மகிழும் ஐரோப்பிய நாடுகளில் நோர்வேயும் (NOR-WAY) ஒன்று. செல்வச் செழிப்பு மிக்க இந்தச் சிறு தேசம் தனது அமைதித் தூதுப்பணிமூலம் அகிலம் முழுவதையும் தன்பால் ஈர்த்து வருகின்றது.

ஏற்கனவே பலஸ்தீனத்தில் அமைதிப்பணியில் ஈடுபட்டமையினால் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு அதே பணியை மிகுந்த பொறுமையோடும் நிதானத்தோடும் அந்நாடு நமது யுத்த பூமியில் ஆற்றுகின்றமைக்காக நல்ல உள்ளங்கள் அதனை நிச்சயம் பாராட்டவே செய்யும்.

ஆனால், ஐரோப்பிய நாடுகள் முதலாளித்துவ ஆதிக்கச் சக்தி என்றும் அந்நாடுகள் பின்பற்றும் கிறிஸ்தவ மதம் அவற்றின் ஆதிக்கத்தைப் பரப்புவதற்கான ஒரு நல்ல கருவியென்றும் ஐயுறும் தென்னிலங்கையின் சில அரசியல் கட்சிகளும் பௌத்த குருமாரில் ஒரு சாராரும் சில ஆண்டுகளுக்கு முன்பு கொழும்பில் அமைந்துள்ள நோர்வே தூதரகத்தினை முற்றுகையிட்டு அந்தத்



46275

தேசத்தின் மரியாதைக்குரிய தேசியக் கொடியை எரித்தமை இன்றும் நம் இதயத்தை வேதனைக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

இவ் அநாகரிகச் செயலின் பின்பும் தான் ஏற்ற அரிய பணியைத் தொடர்ந்து நடத்திவரும் நோர்வே, இத்தனை ஆண்டுகளாகியும் எவ்வித பலனும் கிட்டாத நிலையில் தனது விரக்தியை அழுத்தமான வார்த்தைகளால் கோடிட்டுக் காட்டியுள்ளது. "நெருப்போடு விளையாட வேண்டாம்" என்னும் அந்த வார்த்தைகள் இலங்கையின் நிகழ்கால அரசியல் குழறுபடியை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

அமைதிப் பணியோடு இந்நாட்டின் அபிவிருத்திப் பணியிலும் பெருமளவில் தன்னை ஈடுபடுத்தியுள்ள நோர்வே இதற்காகக் கோடிக்கணக்கில் பணத்தையும் செலவிட்டு வருகின்றமை, அவ்வளவு எளிதில் யாராலும் மறந்து விடக்கூடியதல்ல.

இச்சமயத்தில் அந்நாட்டின் பெயர்(NORWAY) தொடர்பாக எமது மனத்தில் எழுந்துள்ள ஒரு விந்தையான கருத்தையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

NOR என்னும் ஆங்கிலச் சொல் அம்மொழியில் ஓர் இடைச்சொல்லாகும். (Conjunction) இதற்குத் தமிழில், இது அல்லது அது (neither one thing nor the other)என்று பொருள் சொல்வர். இப்பொருளின்படி அந்நாடு ஏதோ ஒரு (NOR) வழியில்(WAY) இந்நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வர பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது என்பது வேடிக்கையான ஓர் அர்த்தம் போல் தோன்றினாலும் அதுதான் உண்மையாகும். (NOR என்பது NORTH என்னும் சொல்லின் சுருக்கம் என்றும் சொல்வர்.)

ஏதோ ஒரு வழியிலாவது சபிக்கப்பட்ட இந்தப் பூமியில் சமாதானத்தைக் கொண்டுவர நோர்வே தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும் என அந்நாட்டை நாம் பெரிதும் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்புடன்

**வாகரைவாணன்.**



## சிறுவர் சிந்தனைப் பாட்டு -2

# விளையாட்டு

மாலையிலே தினமும்
மனம் மகிழும் வண்ணம்
நாலுபுறம் ஓடி
நன்கு விளையாடு!

உடம்பு அதன் உறுப்பு
ஒவ்வொன்றும் நன்கு
திடம் பெறுதல் காண்பாய்
தெரிந்து விளையாடு !

உள்ளமதில் கவலை
ஒன்றும் இருக்காது
வெள்ளமென மகிழ்ச்சி
வீற்றிருக்கும் தம்பி !

விரும்பும் விளையாட்டில்
வீரன் எனத் திகழ்வாய்
அரும்பும் சிறுவயதில்
அலட்சியங்கள் வேண்டாம்.

பல்வேறு விளையாட்டு
பாருலகில் உண்டு
நல்ல விதப் பயிற்சி
நாளும் நீ செய்வாய்

பள்ளியிலே தினமும்
படிப்பின் இடைவேளை
துள்ளி விளையாடு
தோழரோடு சேர்ந்து !

அறிவாளன்.

முரளி போல நீயும்
முன்னேற வேண்டும்
திரளும் சனக் கூட்டம்
திசையெல்லாம் போற்றும்!

உலகமது புகழும்
ஒலிம்பிக்கிலும் கலந்து
நிலையான வெற்றி
நீ பெறுதல் வேண்டும்!

நமது விளையாட்டை
நாம் போற்ற வேண்டும்
எமது என எண்ணி
என்றும் விளையாடு !





# அப்பு

அடர்ந்து கிடந்த முள்ளுக் காட்டை வெட்டிச் சாய்த்து, காய்ந்ததும் அதனை நெருப்புக்கு உணவாக்கி, பின் அரை குறையாக எரிந்த அடிக்கட்டைகளோடு காட்சி தரும் அந்தப் பெருவெளி நிலத்தைச் சுற்றிவர சரவேலி அடைத்து, ஐப்பசிமாத மழையின் புழுதி மண் வாசத்தில் ஒரு பக்கம் மையரும் மறுபக்கம் சோழனும் போட்டு அவை இரண்டும் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக் கொண்டு, பனியிலும், மழையிலும் செழித்து வளரும் பாங்கினைக் கண்டு அளவிலா ஆநந்தம் அடைந்த அப்பு, தனது சேனையின் மத்தியில் தான் போட்ட புரையின் கீழ் சப்பாணி கட்டி அமர்ந்திருக்கின்றார்.

அப்புவின் பக்கத்தில் அவரது வாழ்க்கைத் துணை வள்ளி அப்போதுதான் இழுத்தெடுத்த ஒரு பாத்தி மையர்க் கிழங்கைத் தோல் உரித்து வெட்டிக் கழுவி ஒரு அண்டாவில் போட்டு அவிக்கின்றாள்.

காட்டுக் கொள்ளியில் மூண்டெழும் கனலில் விரைவாகக் கிழங்கு அவிந்துவிடும் என்று கருதிய வள்ளி, அடுத்தவேலையாகத் தனது புருஷனுக்கு மிகவும் பிடித்தமான இறால் கருவாட்டுச் சம்பல் இடிப்பதற்காக உரலைத் துடைத்து நிமிர்த்தி வைத்துவிட்டு தேங்காய் துருவுகின்றாள்.

தேங்காய் துருவி முடிந்ததும் கிழங்கு அடுப்பிற்குப் பக்கத்தில் இருந்த இன்னுமொரு அடுப்பில் இரண்டாக உடைந்த ஒரு ஒட்டுப் பாதியைத் தூக்கி வைத்து அதில் கருவாட்டைப் போட்டுப் பக்குவமாக வறுக்கின்றாள். கருவாட்டின் மணம் அப்புவின் மூக்கைத் துளைத்தெடுக்கின்றது.

கருவாட்டு மணத்தால் கவரப்பட்ட அப்பு, தனது அன்புக்கினியவளின் பக்கம் திரும்பி தனது முப்பத்தியிரண்டு சேங்குப் பல்லையும் வெளியில் காட்டியபடி கொன்னிக் கொன்னிச் சொல்கிறார்: மையர்க்கிழங்கிற்கு நால் கருவாட்டுச் சம்பல் சோக்கா இருக்கும் ............... இண்டைக்கு ஒரு வெட்டு வெட்டலாம்.

கணவனின் திக்குவாய்ப் பேச்சில் வழிந்தோடிய ஆசையைக் கண்டு கொடுப்புக்குள் சிரித்துக் கொண்ட வள்ளி, கிழங்கோடு பகல் பொழுது போயிரும்............ இரவைக்கு ஆட்டமாப்புட்டு, இல்லாட்டி றொட்டிதான் என்கிறாள்.

இரவுச் சாப்பாட்டைப்பற்றிய தனது சகதர்மபத்தினியின் முன்னறிவித்தலுக்குக் காது கொடுத்த அப்பு, புட்டுத்தான் அவி..... நான் ஆத்துக்குப் போய் அஞ்சாறு கொய்மீன் குஞ்சு வீசித்து வாறன்...... ஆணம் வைச்சாப் புட்டுக்குக் கலாதியாக இருக்கும் என்று செழித்து வளர்ந்த சேனைப் பயிர்களைப் பார்த்தபடி கொன்னிக் கொன்னிச் சொல்லிவிட்டு, குடத்தடியில் கையை அலம்பிக் கொண்டு மதியபோசன விருந்திற்கு ஆயத்தமாகின்றார்.

## சிறுகதை

கணவனைச் சாப்பிட விட்டுவிட்டு வாழைச்சேனை மம்முறாயன் காக்காவிடம் நாலுசுண்டு மஞ்சள் சோழன் பருப்பும் ஒரு பாரைக் கருவாடும் கொடுத்து வாங்கிய மண்குடத்தை எடுத்துக் கொண்டு துரவுப் பக்கம்போன வள்ளி, அங்கு ஓலைக் கூந்தலை விரித்துப் போட்டுக் கூட்டமாக நிற்கும் கரும்புப் பெண்களின் அழகில் ஒரு கணம் கிறங்கிப் போகின்றாள். ஆயினும் இந்தக் கிறக்கம் சாப்பிடும் கணவனின் நினைவினால் தெளிவு பெறவே தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு வேகமாகப் புரைக்குத் திரும்புகிறாள்.

வயிறு முட்டச் சாப்பிட்ட அப்பு ஒரு பெரிய ஏவறையோடு எழுந்து வாலை ஆட்டியபடி படுத்திருக்கும் தனது வேட்டை நாய் வீமனுக்கு ஐந்தாறு கிழங்குத் துண்டுகளோடு சம்பலும் வைத்துவிட்டு



குடத்தடியில் பீங்கானைக் கழுவி தண்ணீர் குடிக்கின்றார். துரவுத் தண்ணீர் அவர் வயிற்றைக் குளிர்விக்கின்றது.

மருதம் கமகமக்கும் மட்டக்களப்பின் வடக்கில் உள்ள கிராமங்களில் தட்டுமுனையும் ஒன்று. அப்புவையும் அவர் மனைவி வள்ளியையும் பெற்றெடுத்த புண்ணிய பூமி அது. இதையிட்டு அதிகம் பெருமையாக அப்பு கொன்னிக் கொன்னிக் கதைப்பதுண்டு.

அப்புவுக்கு அவரது ஊர்தான் உலகம். இந்த உலகத்தைவிட்டு தனது சொர்க்க லோகத்திற்கு வா என்று கடவுளே நேரில் வந்து அழைப்புவிடுத்தாலும் அப்பு அசைய மாட்டார். அப்பு என்ன அந்தக் கிராமத்து மக்களில் ஒரு குழந்தை கூட அசையாது. அசைய எப்படி மனம் வரும்?

ஆற்றோரம் ....... பாளை, இளநீர்க் குலைகள்....... தேங்காய் என்று பல்வேறு சுவை அமுதங்களை ஏந்தி வருவோர்க்கு விருந்து படைக்கக் காத்து நிற்கும் தென்னைகள்......... விரிந்து கிடக்கும் ஒலை மெத்தையில் அமர்ந்து கதைபேசி மகிழும் கிளி, குருவிகள்....... பின்நேரத்தில் காலை நீட்டிக் கொண்டு படுத்திருப்பதற்கேற்ற சொரு சொரு மணல் ....... கொழுத்த பன்றி இறைச்சி... சோழன் புட்டு..... எருமைத் தயிர்.... தேன்.......இப்படி அப்புவின் கிராமத்தில் உள்ள எத்தனையோ சுவை அமுதங்கள் கடவுள் வாழ்வதாகச் சொல்லப்படும் சொர்க்கபுரியில்கூட கிடைக்குமா? அதனால் உண்மைச் சொர்க்கமாகிய தனது கிராமத்தைவிட்டு வெளியேற அப்புவுக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது?

அப்புவுக்கு இப்போது வயது அறுபது. நல்ல உயரம். ஆறு அடியாவது இருப்பார். அமாவாசைக்கும் அவர் நிறத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. சிலுப்பியபடி தோன்றும் அவரது கேசம் தேங்காய் எண்ணெய் படாவிட்டாலும் கன்னங்கரேர் என்றே காட்சி தரும். இந்த வயதில் அவரது தலையில் ஒரு வெள்ளை மயிர் கூட இல்லாமல் இருப்பதுதான் பெரும் அதிசயம்.

அறுபதிலும் ஒரு இளைஞன் போல் தோற்றம் தரும் அப்புவுக்கு அவரது ' கொன்னை ' இயற்கை தந்த திருஷ்டி பரிகாரம் என்பதுதான் மற்றவர்களின் எண்ணம். ஆனாலும் அப்புவுக்குக் கோபம் வந்துவிட்டால் அந்தக் கொன்னை இருக்கிற இடமே தெரியாமல் போய்விடும்.

அப்புவுக்குச் சோறு இல்லாவிட்டாலும் சுருட்டு அல்லது வெற்றிலை பாக்கு கட்டாயம் வேண்டும். பாடசாலைக்குப் போகின்ற வயதில் காலையில் தண்ணீர்ச் சோற்றோடு தயிரும் சேர்த்து ஒரு பிடி பிடித்துக் கொண்டு மண்வெட்டியையும் கோடரியையும் கையில் எடுக்கத் தொடங்கியதால் அப்புவின் கைகால் நரம்புகள் எல்லாம் முறக்கேறி சதையைப் பிய்த்துக் கொண்டு வெளியே வரப்பார்ப்பதுபோல் தோற்றம் தரும். இந்த வயதிலும் அப்பு இளைஞனாக இருப்பதன் மர்மம் இதுதான்.

அப்புவுக்கு நான்கு மக்கள். அந்த நான்கு மக்களும் பெண்மக்களாகப் பிறந்ததையிட்டு அவர் என்றைக்குமே அலட்டிக் கொண்டதில்லை. அதேவேளை படைத்தவனுக்குத் தெரியும் படிஅளக்க என்ற பழமொழியை நம்பிக் காலை நீட்டிப் போட்டு இருக்கவும் அவருக்குத் தெரியாது. உழைப்பு.... உழைப்பு.... இது ஒன்றுதான் அப்புவுக்குத் தெரியும்.

நான்கு பெண் மக்களும் இன்று பிள்ளைகுட்டிகளோடு இருப்பது கண்டு அப்புவுக்குப் பெரும் சந்தோஷம். ஒரு மனிதன் வாழ்நாளில் காணவேண்டிய செல்வம் இதுதான் என்று தனது மனைவி வள்ளிக்கு அடிக்கடி கூறும் அப்பு, இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது தனது வாரிசுகளுக்காகத்தான்.

**- வாகரைவாணன் -**

வாழைச்சேனையில் இருந்து தட்டுமுனைக்குச் சைக்கிளில் வரும் பொட்டணிக் காரன் மம்முறாயன் காக்காவின் வாடிக்கையாளர்களில் அப்புவும் ஒருவர். சித்திரை வருடப்பிறப்பிற்கு இந்தக் காக்காவிடம்



இருந்துதான் அப்பு தனக்கும் தனது மனைவிக்கும் உடு புடவைகளைவாங்குவார். ஆனால் அப்போது தனது பேரப்பிள்ளைகளுக்கு வாங்கா விட்டால் அவர் தலை வெடித்துப் போய்விடும். வாரிசுகளும் அவரைச் சுலபத்தில் விட்டுவிட மாட்டார்கள்.

அப்பு தான் வாழும் உலகத்தைவிட்டு சிலசமயம் சாமான் வாங்குவதற்காகத் தெற்கே இருபது மைல் தொலைவில் உள்ள ஓட்டமாவடி, அல்லது வாழைச்சேனைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதுண்டு. அப்படி நேரிட்டால், சாமான் வாங்கிய கையோடு அடுத்த பஸ்சில் ஊருக்குப் புறப்பட்டுவிடுவார். அதுவரை அவரது நிலைமை நீரில் இருந்து வெளியே போடப்பட்ட மீனைப் போலத்தான்.

தட்டுமுனைக் கிராமம் முழுவதும் ஒரு வேரும் அந்த வேரின் மரமும், கிளைகளுமாக இருந்தாலும் அப்பு மற்றவர்களிலிருந்து பெரிதும் வித்தியாசமானவர். இந்த வேறு பாட்டிற்குக் காரணமே அவரிடமிருந்த கலை உணர்வுதான்.

அப்பு ஒரு பிறவிக் கவிஞர். இந்த உண்மையை ஊரில் உள்ளவர்களிடம் யாராவது சொன்னால் ' அந்தக் கொன்னையனா' என்று ஒரு மாதிரியாகக் கேட்கத்தான் செய்வார்கள். அந்தச் சமயங்களில் அப்பு 'வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும்,' என்ற சினிமாப் பாட்டைத்தான் பதிலாகச் சொல்வதுண்டு.

நினைத்த போதெல்லாம் கவிமழை பொழிவதில் அப்புவுக்கு நிகர் அப்புதான். இதில் ஒரு போட்டிவைத்தால் அந்தக் காலத்து கவிகாள மேகம் உயிர் பெற்று வந்தால்கூட அப்புதான் வாகை சூடுவார்.

அப்புவை ஒரு கவிஞனாக்கியவை அவரது கிராமத்தைத் தொட்டுக் கொண்டு ஓடும் ஆறும் மற்றும் குளங்களும் வயல்களும் தான். இந்த இயற்கை அழகைக் காணும்போதெல்லாம் அப்பு என்ற காளமேகம் தானாகவே கவிமழை பொழியும்.

கவிமழை பொழியும் அப்புவின் குணங்களும் ஒரு கவிஞனுக்குரியதாகவே இருந்தன. கொடுமை கண்டு கொதிப்பது.

ஏழை எளியவர்களுக்கு இரங்குவது, தனிமையை நாடுவது, பழமையோடு சண்டைபிடிப்பது......

இந்தக் குணங்கள்தான் அப்புவை அவரது சொந்த ஊரிலேயே ஓர் அன்னியனாகக் காட்டின. ஆனாலும், அப்பு இந்த அன்னியம் பற்றி அலட்டிக் கொண்டதே இல்லை. ஏனென்றால் அவரது உலகம் தனி. - அதற்குள் வேறு யாரும் நுழைய முடியாது.

அப்பு அன்று வழக்கம்போலத் தனது வீட்டின் முற்றத்தில் மல்லாந்து படுத்திருக்கின்றார். மேலே சித்திரைப் பூரண நிலவு வானத்தை மட்டுமன்றி பூமியையும் தனது வசமாக்கிக் கொண்டிருக்கின்றது. ஆண்டுக்கொருதடவை வானில் நடைபெறும் இந்த ஒளிவிழாவில் பூமியும் பூரித்துப் போகின்றது.

இனிய இந்தச் சூழலில் திளைத்த அப்புவிடமிருந்து தானாகவே கவிமழை பொங்கிப் பொழிகின்றது. அப்புவுக்கு இயல்பாகவே நல்ல சாரீரம். தட்டுமுனைக் கிராமம் முழுவதுமே தனது பிறவிக் கவிஞனின் கவிமழையில் மூழ்கிப் போகின்றது:





# இசைபாடும் அழகிய கிராமம்

ஆறது பனிச்சங்கேணி
அழகிய யமுனைபோல
பேறெனத் தென்னஞ்சோலை
பெரு நிழல் பந்தல் போடும்
சேறது தின்னும் அந்தச்
'செங்கண்ணன்' மரதன் ஓடும்
ஆறியே நிற்கும் கொக்கு
ஆனதோர் சமயம் பார்க்கும்

தோணியது நீரைத்
தொட்டபடி ஓடும்
மீனும் அது கண்டு
விரைந்தோடி மறையும்
ஊனமென நண்டு;
ஊன்றிக் கால் வைக்கும்
கூனி றால் கரையில்
குழிதோண்டிப் படுக்கும்

கடலதன் ஓசை கேட்டு
கானலும் விழித்துக் கொள்ளும்
மடலதன் வெளியே தாழை
மலர் முகம் காட்டி நிற்கும்
நடையது பழகும் நண்டு
நல்லதோர் நேரம் என்று
படகது தாவிச் செல்லும்
பறவைகள் வாழ்த்துப்பாடும்.


# ஆரணி

துள்ளி எழும் அலைகள்
சுமந்து வரும் பூக்கள்
வெள்ளி என ஒளிரும்
வெறுந் தரையின் மீது
அள்ளி அவை கொட்டும்
அதன் அழகைக் காணில்
உள்ளம் பறி போகும்
உவர்க்கடலினோரம்!

கடலோரம் மண்ணில்
கால்வைத்து நடப்பின்
உடலெல்லாம் இன்பம்
ஊர்ந்து வரும் தானே!
இடமதில் இயற்கை
எழுந்திருக்கும் கோலம்
அடடா! பார்க்க
ஆயிரம் கண் வேண்டும்!

இளங் காலை நேரம்
எழுவான் கரை ஓரம்
அழகெல்லாம் வானில்
அற்புதமாய்த் தோன்றும்!
பழங்காலம் போல
பழுதொன்றும் இன்றி
விளங்கும் அதன் கோலம்
விபரிப்பவர் யாரோ?

நீலக் கடல் ஓரம்
நெய்தல் நில விரிப்பு
கோலமுறு சங்கு
கொடி மலர்கள், புற்கள்
சோலையது புன்னை
சொர்ண மலர் சொரியும்
ஞாலமது வியக்கும்
நயனமது விரியும்.



மேற்கிலும் நதியின் ஆட்சி
மெல்லென ஒலிக்கும் சப்தம்
பார்க்கவே குளிரும் கண்கள்
பசுமையின் அரங்கமாகும்
தூக்கிய குலைகளோடு
தூணென வாழை, கமுகு
போக்கினில் வளரும் பூமி
பொன்னள்ளிக் கொட்டுமம்மா!

பொன்னது விளையும் பூமி
பொலிந்திடும் சோழன், மையர்
கண்ணென விளங்கும் பூமி
கதிர்மணி குலுங்கும் கழனி
விண்ணது போலும் நீண்டு
விரிந்திடும்! செழிப்பினாலே
தன்னையே அழகு செய்யும்
தனிப்பெரும் செல்வமம்மா!

(இன்னும் பாடும்)

அறியவேண்டிய அரிய மனிதர்-16

# சிங்கப்பூரின் சிற்பி

காலனி ஆதிக்கத்திலிருந்த எந்த ஒரு நாடாக இருந்தாலும் சரி ... சுதந்திரம் என்பது, ஒன்று ஆயுதப் போராட்டத்தின் இறுதியில் கிடைக்கும்..... அல்லது அகிம்சைப் போராட்டத்தின் வாயிலாக் கிடைக்கும். ஆனால், சிங்கப்பூருக்குக் கிடைத்த சுதந்திரம் வித்தியாசமானது. ஆம்... "சுதந்திரம்" என்பது சிங்கப்பூரின்மீது திணிக்கப்ட்டது.

1965ம் ஆண்டு இஸ்லாமிய நாடான மலேசியா, சிங்கப்பூரை தன் ஆளுமையிலிருந்து வெளியேற்றியது. ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த ஒரு இசை நிகழ்ச்சியைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு சிங்கப்பூர் ரேடியோ இந்தச் செய்தியை அறிவித்தபோது சிங்கப்பூர் மக்களால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

படு மோசமான வறுமையில் இருக்கும் நாடாக இருந்ததால் சுதந்திரம் கிடைத்த நாளை அது வாண வேடிக்கைகள் நடத்திக் கோலாகலமாகக் கொண்டாடும். ஆனால் மலேசியாவில் இருந்து சிங்கப்பூர் வெளியேற்றப்பட்ட தினத்தை சிங்கப்பூர் மக்களால் தங்கள் சுதந்திர தினமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏதோ அனாதைகளாகி விட்டமாதிரி அவர்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள். தங்களின் தலைவரான லீக்வான் யூவை நோக்கி ஓடினர். கண்களில் நீர்த்திரையோடு மலேசியாவுடனான விலக்கல் பத்திரத்தில் வேறு வழியின்றிக் கையெழுத்துஇட்டுவிட்டு வந்திருந்த லீக்வான் யூவால் உடனடியாகத் தனது மக்களுக்கு எந்த ஆறுதல் வார்த்தைகளும் சொல்லமுடியவில்லை.

பூகோள ரீதியாக சிங்கப்பூர் என்பது ஒரு தீவு. அங்கு இரும்பு, நிலக்கரி போன்ற எந்த விதமான இயற்கை வளங்களும் இல்லை. தாகம் எடுத்தால்கூட அது மலேசியாவிடம் தான் கை நீட்ட வேண்டும்.



சிங்கப்பூர் வாசிகளின் துயரத்துக்கு இதுமட்டுமல்ல காரணம். மலேசியாவுடனான உணர்வு பூர்வமான பந்தம் திடீரென்று அறுந்து போனதால் ஏற்பட்ட வலியை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

" துயரப்படுவதாலோ, கூடி அழுவதாலோ கஸ்டங்கள் மறையாது. வாருங்கள்... நமது தேசத்தை நாமே நிர்மாணிப்போம்." என்று லிக்வான் யூ குரல் கொடுக்க, சிங்கப்பூரின் இருபது இலட்சம் மக்களும் அவர் பின்னால் அணிவகுத்து நின்றனர். அந்தச் சமயம் சுத்தம் என்பதே என்ன என்று தெரியாத நிர்வாகமாகத்தான் சிங்கப்பூர் இருந்தது. "நாம் வசிக்கின்ற இடம் சுத்தமாக இருந்தால்தான் முன்னேற்றத்தைப் பற்றியே சிந்திக்க முடியும்." என்று சொல்லிவிட்டு லீ க்வான் யூ வீதிகளில் உள்ள குப்பைகளை அகற்றும் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார். பத்திரிகைகளில் செய்தி வரவேண்டும் என்ற எண்ணத்தில் கமராக்களுக்குப் போஸ் கொடுக்க இதைச் செய்யாமல் உளமாரவும், உண்மையாகவும் இதைச் செய்வதைப் பார்த்த மக்கள் தங்கள் குடியிருப்புக்களைச் சுத்தமாக வைத்திருக்க ஆரம்பித்தனர்.

"வசிப்பதற்கு வீடு, சாப்பாடு போடுவதற்கு ஒரு வேலை, அறிவை வளர்த்துக் கொள்ள கல்வி... ஒரு மனிதனுக்கு அடிப்படையாக இவை மூன்றும் இருந்தால்தான் நாம் முன்னேற முடியும்" என்று முடிவு செய்த லீ க்வான் யூ இந்த மூன்று விசயங்களிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தார். முன்னேறியே ஆகவேண்டும்" என்ற வெறியில் இருந்த சிங்கப்பூர் வாசிகள் ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணிநேரம் வேலை செய்தனர்.

இதையடுத்து தகரக் குடிசைகள் இருந்த இடங்களில் அடுக்குமாடி குடியிருப்புக்கள் தோன்றின.

இன்னொரு புறம், தொழில் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கில் ஜுராங் தொழில்பேட்டையை அவர் ஆரம்பிக்க அது வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதற்கு ஓரளவு உதவியது. நாட்டின் கதவுகளை அவர் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் திறக்க,

நாட்டின் முன்னேற்றம் வேகம் பிடிக்க ஆரம்பித்தது. சிங்கப்பூரை வங்கிகளின் தலைநகராக மாற்றினால் நாட்டில் அதிகமாகப் பணம்புழங்கும் என்ற தீர்க்க தரிசனத்துடன் லீக்வான் யூ பல வங்கிகளைத் துவங்க இதுவும் வேர்க்கவுட் ஆனது. 1975ம் ஆண்டு மேலை நாடுகளில் " கம்பியூட்டர்" எழுச்சி நடந்த சமயம்... "ஒரே ஒரு நாள் கூட நாம் பின்தங்கிவிடக்கூடாது" என்ற வேகத்தில் அவர் சிங்கப்பூரின் ஒவ்வொரு அலுவலகத்திலும் கொம்பியூட்டரை முழுவீச்சில் அறிமுகப்படுத்த சாதாரண வர்த்தக நிறுவனங்களிலிருந்து வங்கிகள் வரை கம்யூட்டர் மயமானது. இதை அடுத்து கம்பியூட்டரின் வேகத்திலேயே சிங்கப்பூரும் வளர ஆரம்பித்து. இந்த அதிவேக வளர்ச்சியை நேரில் பார்த்து அதிசயிக்க ஆண்டொன்றுக்கு அறுபது இலட்சம் பேர் என்ற கணக்கில் ருரிஸ்ட்டுக்கள் சிங்கப்பூர்வர ... விமானப் போக்குவரத்து ஹோட்டல் போன்ற உப தொழில்கள் தானாகவே வளர்ந்தன. இன்னொரு புறம் அது அந்நிய செலவாணியை அள்ளி அள்ளிக் கொடுத்தது.

சுமார் 31 வருடங்கள் சிங்கப்பூரின் பிரதமராக இருந்து அந்த நாட்டின் தலையெழுத்தை மாற்றியமைத்த லீ க்வான் யூ கண்டிப்புக்கு பேர் போனவர். மக்களால் நேசிக்கப்பட்டவர் என்றாலும், சர்வாதிகாரியின் சாயல் உள்ளவர் என்று கூட சிலர் இவர் மீது குற்றம் சுமத்துவதுண்டு. காரணம் சமூகவிரோதிகளிடம் லீக்வான் யூ மனிதாபிமானமே காட்டுவதில்லை. " மனித உரிமைகளை நசுக்காதே" என்று மேலைநாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் லீக்வான் யூ அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை.

போதைப் பொருள் விற்பவர்களைத் தூக்கிலிடுவதில் ஆரம்பித்து, பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் ரௌடிகளை விசாரணையில்லாமல் சிறையிலடைப்பது ...என்று பல கடுமையான சட்டங்களை அமுல் படுத்தியிருக்கின்றார். அவரால் சகித்துக் கொள்ளமுடியாத இன்னொரு விடயம், லஞ்சம் மற்றும் ஊழல்.

(வாவ் 2000)



# கும்ப கோணம்

கும்பகோணத்தில்
குழந்தைகள்
கும்பலாக........
நம்பமுடியவில்லை
நாடே அதிர்ந்தது !

தீ.......
தின்று முடித்தது !
தூ......
உன்னையும் துதிப்பதா?

பள்ளிக்கூடம்
படிப்பதற்காகத்தான்
ஆனால்
கொள்ளி வைத்தல்லவா
குழந்தைகளைக்
கொழுத்திவிட்டார்கள்


இளங் குருத்துக்கள்
இருக்கக்கூடாதென்று
கிழங்கள் செய்த
கீழ்சாதி வேலையா இது?

ஆறிலும் சாவு என்று
இதற்காகத்தானா
சொன்னார்கள்?
நீராக்கிவிட்ட
நெருப்பே ... உன்னை
அக்கினி தேவன் என்று
யார் அழைத்தார்கள்?

-தூரி-

குழந்தைகள் தெய்வங்கள்
அந்தத் தெய்வங்களுக்குக்
கும்பகோணம் கட்டியது
கோயிலா? .......இல்லை...
கல்லறை !

இந்தியாவே.....
இன்னும் ஏன்
இருக்கிறாய்?
பிள்ளைகளைக் காப்பாற்ற
முடியாத நீ
ஒரு பெரிய அணு
வல்லரசா?





# ஈழதேசத்தில் ஒரு சோழ தேசம்

விஜயாலய சோழனால் தோற்றம் பெற்ற இரண்டாவது சோழப் பேரரசிற்கு வெற்றிமேல் வெற்றி பெற்றுத் தந்து, புகழின் சிகரத்திற்கு அதனை இட்டுச் சென்ற அருள் மொழி வர்மன் என்னும் இராஜ ராஜ சோழனின் பிறந்தநாளான "சதயத்திருநாளை" முன்னிட்டு சோழதேசம் முழுவதுமே மிகுந்த உற்சாகத்தோடு பல்வேறு அணிகலன்களால் தன்னை அலங்கரித்துக் கொள்கின்றது.

"சதயத் திருநாள்" என்பதனால் தலைநகரம் தஞ்சைத் தரணி சன சமுத்திரத்தில் அகப்பட்டுப் படாதபாடு படுகின்றது. சின்னஞ்சிறு குழந்தைகள்கூட அந்தச் சமுத்திர அலையில் சிக்கித் திணறி தம் அன்னையர் கைகளைப் பற்றிக் கொண்டு ஒருவாறு கரைசேர்கின்றன.

மன்னர் மன்னன் பிறந்த தினத்தன்று பொங்கிப் பிரவாகிக்கும் மக்கள் பெரு வெள்ளத்தை அரண்மனை மாடத்தில் நின்றவாறு இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்த சேரத்தைச்சேர்ந்த அவனது பட்டத்து ராணி வானவன்மாதேவி, புதல்வியர் குந்தவை, மாதேவடிகள் ஆகியோர் முகங்களில் ஆனந்தப் பரவசம் அப்படியே தெரிகின்றது.

வழக்கம்போல சதயத்திருநாளைக் கண்டுகளிப்பதற்காகத் தஞ்சைமாநகரில் ஒன்றுகூடிய பழுவூரின் பழுவேட்டரையர், கொங்கு நாட்டின் கொல்லி மறவன், நற்றியூரான் பிரதிகண்ட வர்மன், திருவல்லத்தைச் சார்ந்த சங்கர தேவன், கொடும்பாளூரின் வேளான் சுந்தரச் சோழன், கடப்பை வைதும்பமரபு நன்மைரையன், இலாடப் பேரையன், மறவன் நரசிம்மவர்மன், முதலான குறுநில மன்னர்கள் தம் சக்கரவர்த்தியின் பால் மக்கள் வைத்திருக்கும் அன்பின் அடையாளமான ஜனசமுத்திரம் கண்டு மெய் சிலிர்த்துப் போகின்றனர்.

பெரும் ஆரவாரத்தோடும் உற்சாகப் பேருவகையோடும் தனது பிறந்த நாள் விழாவைச் சோழதேசம் முழுவதும் கொண்டாடும் வேளை, அதில் சிறிது கூட அக்கறை செலுத்தாது தனது ஒரே மைந்தனும் யுவராஜனுமான இராஜேந்திர சோழனுடன் அரண்மனை மந்திராலோசனை மண்டபத்தில் வீற்றிருந்து அந்தரங்கமாக உரையாடிக் கொண்டிருக்கின்றான் இராஜ இராஜன்.

இராஜேந்திரா..........பாண்டியனையும் சேரனையும் அடிபணிய வைத்த நமக்கு இனி ஈழம்தான் இலக்கு...........

ஈழமா?..........

ஆமாம்...............ஈழத்தின்மீது நாம் விரைவாகப் படையெடுக்க வேண்டும். இதற்கான காரணம் மிக முக்கியமானது. சொல்லுகிறேன் கேள்.......... பல்லாண்டுகளுக்கு முன் எனது பாட்டனார் முதலாம் பராந்தகச் சோழன் பாண்டிய நாட்டின்மீது படை நடத்தி வாகை சூடிய வேளை அரசன் இரண்டாம் இராஜசிம்மன், அரச சின்னங்களையும் ஆபரணங்களையும், எடுத்துக் கொண்டு ஈழம் சென்று, சிங்கள மன்னன் தம்புலனிடம் அவற்றை அடைக்கலமாக அளித்துவிட்டு, இரண்டொரு திங்களில் தாயகம் சேரநாட்டிற்குத் திரும்பிவிட்டான்.

தந்தையிடம் இருந்து தமிழக வரலாற்றில் ஒரு துளியைக் கேட்ட தனயன் இராஜேந்திரனின் கண்கள் அகல விரிகின்றன. அதனைக் கவனித்த இராஜ இராஜன் மேலும் சொல்கிறான்.

## - வரலாற்றுச் சிறுகதை -

பாண்டியனின் அந்தத் திரவியங்களைக் கைப்பற்றுவதற்காகத்தான் பராந்தகர் ஈழத்தின்மீது படை எடுத்தார் என்று பலரும் கருதுகின்றனர். ஆனால் இதில் பாதிதான் உண்மை. பாட்டனாருக்கும் பாண்டியனுக்கும் வெள்ளூரில் இடம்பெற்ற பயங்கரப் போரில் ஈழம் ஓடோடிவந்து பாண்டியனோடு இணையும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

தந்தையே, என்னாலும் இதனை நம்ப முடியவில்லை.

அரசியலில் எதனையும் நம்பமுடியாது இராஜேந்திரா. ஆனாலும் கேள்......... வெள்ளூர்ப் போரில் ஈழம் மட்டுமல்ல சேரநாடும் மதுரையோடு சேர்ந்து கொண்டது. இதனால் அளவற்ற சினம் அடைந்த பராந்தகர் இந்த முக்கூட்டை அடக்கி வைக்க வேண்டும். இல்லையென்றால் சோழதேசத்துக்கு ஆபத்து என்று அப்போதே தீர்மானித்துவிட்டார். இதன் விளைவுதான் அவர் ஈழத்தின்மீது நடத்திய படையெடுப்பு.

பிறகு.................



ஈழத்தின்மீது சோழதேசம் படையெடுத்து வருவதை அறிந்த அதன் அன்றைய அரசன் உதயன், அரச திரவியங்களோடு காடுகள் அடர்ந்த உரோகணைக்குச் சென்று ஓடி ஒளிந்து கொண்டான். இத்தருணத்தில்தான் இராஸ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஸ்ணன் சோழ தேசத்தின்மீது தனது படைகளை ஏவினான். கிருஸ்ணனின் இந்தச் செயலினால் கிலேசமும் சினமும் அடைந்த பராந்தகர், ஈழத்திலிருந்து தனது படைகளைத் திருப்பி அழைக்கவேண்டியதாயிற்று.

இவ்வாறு, ஒரு பெரும் வரலாற்றைத் தனது மகனிடம் கூறிமுடித்த இராஜ இராஜனின் முகம் இறுக்கமடைகின்றது. அச்சமயம், என்ன, இராஜ இராஜா உனது பிறந்தநாள் விழாவையே உதறிவிட்டு எந்த நாட்டின்மீது படையெடுக்க உன்மகனோடு சேர்ந்து திட்டம் தீட்டுகின்றாய் என்று வினவியபடி அங்கு வருகின்றார் அவனது தமக்கையார் குந்தவை தேவி.

தனக்கே உரித்தான ஒரு குறும்புப் பார்வையோடு தரிசனம் தந்த தமக்கையாரை அன்போடு வரவேற்ற இராஜ இராஜன் எந்தத் திட்டம் தீட்டப்பட்டாலும் தங்களுக்குத் தெரியாமலா அரங்கேறப் போகின்றது என்றான் மிகுந்த பணிவோடு!

சோழப் பேரரசின் மன்னனாகத் திகழ்ந்தாலும் இராஜஇராஜன் தன்மீது பெரும் மதிப்பு வைத்திருப்பதை நன்கு அறிந்திருக்கும் குந்தவை விளையாட்டாகவே இன்னுமொரு கேள்வியை அவனிடம் கேட்கின்றாள்.

## - அரவிந்தன் -

தமக்கையாரிடம் இருந்து அப்படியொரு கேள்வியை எதிர்பார்த்திராத இராஜ இராஜன் ஆச்சரியம் அடைந்தவனாய் தன் மகன் இராஜேந்திரனைப் பார்த்து, "இராஜேந்திரா உன் அத்தையார் சோழ சிம்மாசத்தில் அரசியாக வீற்றிருக்க வேண்டியவர். நமது தேசத்தின் நடப்புக்களை மட்டுமன்றி ஈழத்தின் விவகாரங்களையும், தனது விரல் நுனியில் வைத்திருக்கின்றார். ஈழம்தானா உனது அடுத்த இலக்கு? என்ற அக்கையாரின் வினா உண்மையிலேயே எனக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது. அக்கையார் தனிப்பட்ட

விதத்தில் ஒற்றர்கள் யாரையாவது வைத்திருக்கின்றார்களோ என்னவோ, யாருக்குத் தெரியும்?

இராஜ இராஜனின் இந்தப் புகழ்ச்சியுரையினால் மனம் மகிழ்ந்த குந்தவை, எல்லாம் நம் தந்தையின் ஆசீர்வாதங்கள்தான் என்கிறார். அவள் கண்கள் நீரைச் சொரிகின்றன.

இதனால் உணர்ச்சிவசப்பட்ட இராஜ இராஜனின் மனதிலும் தந்தை இரண்டாம் பராந்தகர் என்னும் சுந்தர சோழன் நினைவுகள் பீறி எழுகின்றன. அதில் அவன் தன்னை இழந்து போகின்றான்.

சதயத்திருநாள் கொண்டாட்டத்தில் தன்னை மறந்திருந்த சோழ தேசம் அதிலிருந்து விடுபட்டு திடீரெனப் போர்க்கோலம் பூணுகின்றது. இளவரசன் இராஜேந்திரன் தலைமையில் ஈழம் நோக்கி எழுந்த கடற்படையை இராஜ இராஜனும் அவன் பட்டத்து இராணி வானவன்மா தேவியும் தமக்கையார் குந்தவையும் வாழ்த்தி வழி அனுப்பிவைக்கின்றனர். சோழவாவியைக் கலக்கிக் கொண்டு புறப்பட்ட நூற்றுக் கணக்கான நாவாய்களில் இருந்து ஈழத்தின் மாந்தையில் இறங்கிய வீரர் பட்டாளம் அனுராதபுரத்தை நோக்கிப் புயலென விரைகிறது. இந்தப் புயல் புழுதியில் ஈழம் முழுவதுமே மறைந்து போகின்றது.

அனுராதபுரத்தை முற்றுகையிட்ட சோழர்படை அதனைச் சாம்பல் மேடாக்குகின்றது. மன்னன் ஐந்தாம் மகிந்தனும் அவன் குடும்பத்தினரும் கைதிகளாகின்றனர். இந்த வெற்றியினால் பெரு மகிழ்ச்சியடைந்த இராஜேந்திர சோழன் இராச ரட்டையில் ஜனநாதமங்கலம் என்னும் பெயரில் ஒரு புதிய நகரை உருவாக்கி ஈழத்திற்கு மும் முடிச் சோழ மண்டலம் என்னும் பெயரினைச் சூட்டுகின்றான்.

இராஜேந்திர சோழனின் இந்த மகிழ்ச்சியில் பங்கெடுப்பதுபோல் மகாவலிகங்கை துள்ளிக் குதித்து ஓடுகின்றது.



# மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் !

பெண்களின் உரிமைகள் பற்றிய கருத்துக்களும் உள்ளடக்கங்களும் உரக்கவே பேசப்படுகின்ற காலம் இது. இது குறித்த வாதப் பிரதி வாதங்களுக்கும் ஏன் பட்டிமன்றங்களுக்கும் கூட இங்கு பஞ்சம் இல்லை. பெண்கள் உரிமைகள் என்றால் என்ன? இந்த உரிமைகள் எங்கோ இருக்கின்ற-எட்டித் தொடமுடியாத கற்பனைகள் அல்ல. - அல்லது அவை மற்றவர்களால் பரோபகாரமாக இரக்க சிந்தனையுடன், பெண்களுக்குத் தானமாக வழங்கப்பட வேண்டியவையும் அல்ல. மாறாக, பெண்களின் உரிமைகள் - மனித உரிமைகளேயாகும். இதை யாராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுத்துள்ள பிரகடனத்தில், " சகல மாந்தர்களும் (அடிமைத் தளைகள் ஏதுமின்றி ) சுதந்திரமாகவும், சமத்துவமான கௌரவம் மற்றும் உரிமைகள் ஆகியவற்றுடனேயே பிறக்கின்றனர்". - என்று குறிப்பிடுகின்றது. இங்கு மாந்தர் எனப்படுவது ஆண், பெண், இருபாலாரையுமே குறிக்கின்றது என்பது யாவரும் அறிந்ததொன்றே. சகல மாந்தரும் என்று குறிப்பிடுவது உலகத்தில் உள்ள அனைத்து மக்களையுமே! ஆண் பெண் என்ற பாகுபாடு இங்கு காட்டப்படுவதில்லை. இந்தவகையில் பெண்களின் உரிமைகள் மனிதனின் உரிமைகளே என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

நீதி - வகுக்கும் போதோ அல்லது உரிமை பற்றிப் பேசும் போதோ எந்த இடத்திலும் ஆண், பெண் என்ற வேறுபாடு காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்கள், வல்லினம் என்றோ, பெண்கள், மெல்லினம் என்றோ உரிமைகள் கூட்டிக் குறைக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகளுக்கான பிரகடனம் தெளிவாகவே எடுத்தியம்புகின்றது.

" நாடுகளில் வாழும் சகல தனிநபர்களும் இந்த உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட சகல உரிமைகளையும் அனுபவிப்பதை உறுதி செய்வதோடு அவர்களின் சகல உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். உரிமைகள் அனுபவிப்பதை உறுதி செய்யும் போது ஒருவரின் இனம், நிறம், பால், மொழி, சமயம், அவர் கொண்டிருக்கும் கருத்துக்கள்,

பிறப்பு, அந்தஸ்து, ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவிதப் பாகுபா காட்டப்படாது இருப்பதை உறுதி செய்ய வேண்டும்." என்று ஐக்கி நாடுகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் உறுப்புரை 2 - மிகவ விளக்கமாகக் குறிப்பிடுகின்றது. எந்தவிதமான சந்தேகங்களுக்கு இடமில்லாத வகையில் பெண்களின் உரிமைகள் மனித உரிமை ளிலிருந்து எந்த விதத்திலும் வேறுபடவோ, மாறுபடவோ இல்லை என்பது இதன் மூலம் நிரூபணமாகின்றது.

சமத்துவம்- சம அந்தஸ்து என்பன பெண்கள் கோரும் இன்றை உரிமைகள். யாரும், யாருக்கும் அடிமை இல்லை என்பது உரிமைக பற்றிய சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். இதில் பெ என்பவள் அடக்கப்பட வேண்டும்; அடிமையாக்கப்பட வேண்டும் என் சமூகங்கள் எழுதாத சட்டங்களையும், பொருந்தாத விதிகளையு பெண்கள் மீது திணிக்க முற்படும்போது அங்கு மனித உரிமை மீறு ஏற்படுகின்றது. அது பெண்கள் என்பதாலே உரிமை மீறல்கள் அல் என்று ஆகிவிடாது. இவ்வாறான பல்வேறு உரிமை மீறல் செயற்பாடுகளே அவ்வாறான அமைப்புக்களுக்கும் விதந்துரைகளுக்கும் வழி சமைத்த என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒரு தனி மனிதனுக்கு சுதந்திரம் தேவைப்படுகின்றது அடக்கிவைத்தலையும், ஆளப்படுத்தலையும் யாரும் விரும்புவதில்லை அடக்கு முறைகளுக்கெதிரான போராட்டங்கள்தான் இன்று உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இதையேதான் ஒவ்வொரு பெண்ணு சொல்கிறாள், வேண்டுகிறாள், விரும்புகிறாள்.இது அவளது உரிமையு கூட. இது மனித உரிமை அல்லாமல் வேறு என்ன?

பலாத்காரமும், வன்முறையும், சித்திரவதையும், இன் பெண்களுக்கேற்படும் பலத்த அச்சுறுத்தல்களாக உள்ளன. ஐக்கி நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பற்றிய அறிக்கையை ஏற்று கைச்சாத்திட்ட நாடுகள் கூட பெண்களுக்கெதிரான அந்த உரிமை மீறல் செயற்பாடுகளை அதிகமாகக் கவனத்தில் எடுத்து கொள்வதில்லை. இன, மத, சமூகக் கட்டுப்பாடுகளைக் காரணம் காட் அவை கண்களை மூடிக் கொள்கின்றன.

இந்தியா, இலங்கை, போன்ற நாடுகளில் பாரம்பரியம், பண்பாடு என்ற முலாம்களை பூசிக் கொண்டு நடமாட வேண்டிய தேவை இருப்பதால் அந்த உரிமை மீறல்களைப் பற்றி பல சமயங்களி



யாரும் அலட்டிக் கொள்வதில்லை. அது சகஜம் அல்லது அது அப்படித்தான், இதுவெல்லாம் சர்வசாதாரணம் என்ற வார்த்தைகளைக் கொண்டு பெண்களைச் சமாதானப் படுத்தும் முயற்சியில் அவை ஈடுபடுகின்றன. இங்கு தேவைப்படுவது சமாதானப் படுத்தும் முயற்சியல்ல. மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தும் போராட்டம், கிளர்ந்தெழும் நடவடிக்கைகள், இவை பெண்களின் உரிமை மீறல்கள் அல்ல. மனித உரிமை மீறல்கள்! மனிதத்துக்கு, அதன் மாண்புக்குச் செய்யப்படும் அவமரியாதை, அடாவடித்தனம் என்பதை உணர்த்தும் அதிரடி நடவடிக்கைகள்தான் இங்கு அவசியத் தேவையாகிறது.

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கின்ற விந்தை மனிதர்களைக் கனல் எழச் சாடியவன் மகாகவி பாரதி. அந்தத் தெய்வக் கவிஞனின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தவர்கள் நாங்கள். ஆனாலும் அவன் காலச் சிந்தனைகளிலிருந்து நாங்கள் முற்றாக விடுபடவில்லை என்பதுதான் நிதர்சனம். அடிமை வாழ்வை விடுவித்து ஆண்களுக்குச் சமமாக வாழும் வாழ்வே இன்று பெண்கள் வேண்டி நிற்பது. இது பெண்கள் உரிமை. இங்கு ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதாலே அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் என்று தன் கால சமுதாயத்தின் இழிநிலையைக் கண்டு குமுறி அதற்குப் பரிகாரம் சொன்னவன் பாரதி. "அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முனைபவர் பித்தராம்." என்று எள்ளி நகையாடியவன் அவன். இதே நிலையில் இன்றும் அநேக பெண்கள் அவஸ்தைப் படுவதும் விரக்தியடைவதும் தெரிந்ததே.

**- கலைநிலா -**

ஆயினும் இது பெண்கள் விடயமென்று ஒதுங்கிக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்? ஓர் நூற்றாண்டுக்கு முன்பே பாரதி - பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாகத்தான் கண்டான். மனித உயிர்கள் என்றுதான் குறிப்பிட்டான். ஆனால் இன்று..........?

பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு, பலாத்காரம், இவைதான் இன்றைய பத்திரிகைகளில் பரபரப்புச் செய்திகள். இவை சமுதாயத்தில் பல சமயங்களில் செய்திகளாகவே வந்து போய்விடுகின்றன. ஊடகங்கள் கூக்குரல் இடுகின்றன........ அவ்வளவுதான். இங்கு பாதிக்கப்படுவது

பெண்கள். உரிமை மீறப்படுவது பெண்களிடம். ஆனால் அவை யாரிடமும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.அவமானமும், அவதூறும் சம்பந்தப்பட்ட பெண்களுக்கு மிஞ்சுவதால் பல சமயங்களில் இவ்வாறான உரிமை மீறல்கள் வெளியே தெரியாமல் மூடி மறைக்கப்படுகின்றன. அவை வெளிக் கொண்டுவரப்படுவதில்லை. இவற்றுக்கு சமுதாயத்திடம் அவர்களுக்கு இருக்கும் பயம் , பண்பாடு, என்பவற்றினால் ஏற்பட்ட தாக்கம் என்பவை தவிர அறியாமையும் முக்கிய காரணமாக அமைகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டுமானால் சமுதாயத்தின் முழு அளவிலான ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. சிலசமூக அமைப்புக்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ, ஏன் அரசாங்கமோ கூட இவற்றைச் செயற்படுத்திவிட முடியாது. இதற்குப் பெண்களின் உரிமைகள் மனித உரிமைகளே - அவற்றின் மீறல்கள் மனித உரிமை மீறல்களே என்ற எண்ணம் சகல தரப்பினரிடையேயும் உருவாக்கப்பட வேண்டும்.

**சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி அரசாங்கத்தால் இவ்வாண்டு நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை.**

இன்று பெண்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சனை சீதனக் கொடுமையாகும். பல்லாயிரம் யுவதிகள் சீதனக் கொடுமையினால் கண்ணீரில் கரைந்து கொண்டிருக்கின்றனர். மணவாழ்வு காணாத அவலம் ஒருபுறம். மாமியார் கொடுமையால் இன்னொரு புறம் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு பெண் திருமணம் செய்வதற்காகப் பொன்னும், பொருளும்கொடுக்கவேண்டும்என்பதுயாருடையஉரிமை? யார் இட்டு வைத்த கோட்பாடு? எப்படியோ தொடங்கி எப்படியோ வந்து சேர்ந்திருக்கும் அந்த சீதனப் பழக்கம் இன்று பல பெண்களின் கண்ணீருக்கும் அவலங்களுக்கும் காரணமாகி இருக்கின்றது.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்'' என்றும் " பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்றும் பாடி எதிர்வு கூறியவன் பாரதி. அவன் கண்ட கனவு இன்று ஓரளவு நனவாகி விட்டது. ஆனாலும் சமூகத்தின் அடிமட் டத்தில் வாழ வகை அறியாது தவித்துக் கொண்டிருக்கின்ற பெண்கள் எத்தனை? அடிமட்டத்திலிருக்கும் கடைசி பெண்ணுக்கும் இந்தச் செய்தி எட்டும்போது அந்தப் பெண்ணும் அந்த சுதந்திரத்தை உரிமையை அனுபவிக்கும் போதுதான் அந்தப் பிரச்சனை இல்லாது விடுகின்றது. அதுவரையும் இது பெண்கள் உரிமை



மீறல்களாகவே இருக்கும்.

பெண்கள் ஒதுக்கப்படக்கூடாது. அவர்களது உரிமைகள் மீறப்படக் கூடாது என்பதுதான் இன்றைய பெண்களின் எதிர்பார்ப்பு. சமவாய்ப்பு என்று கூறும்போது வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் அதேநிலை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். மூளைத் தொழிலாளர்கள் என்ற வகையில் இந்த பாரபட்சம் காட்டப்படுவதில்லை. எனினும், சாதாரண கூலித் தொழிலாளியைப் பொறுத்தவரையில் அங்கு பெண் என்பதற்காக குறைந்த வேதனமே அவளுக்கு வழங்கப்படுகின்றது. இங்கு அவளது உழைப்பு சுரண்டப்படுகின்றது. அது அப்பட்டமான உரிமை மீறல் செயற்பாடாகும். இது பெண்களின் உரிமை மட்டுமல்ல மனித உரிமையும்கூட.

இன்னும் சொல்லப் போனால் இல்லத் தலைவிகள் என்ற பெயரில் குடும்பத்தில் முழுநேர வேலைக்காரிகளாக அடிமைகளாக வீட்டில் வதைபடும் பெண்கள் எத்தனையோ பேர் நம்மிடையே உள்ளனர். இதுவும் பெண் உரிமை மீறல்களே.

அடுத்து வெளியில் வேலைக்குச் சென்று உழைக்கும் படித்த பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்களது அவலம் சொல்லி மாளாது போலவே தோன்றுகின்றது.பெண்மையைப் போற்றும்' பெண்ணாகவும் அவள் இருக்க வேண்டும். அதே வேளை அவள் வெளியே போய் சம்பாத்தியமும் செய்து வர வேண்டும். குடும்ப அங்கத்தவர்களின் சௌகரியங்களுக்கு எந்தவிதமான இடையூறும் இன்றி கவனித்துக் கொள்ளவும் வேண்டும். இது அவளுக்கு ஓய்வே இல்லாத சுமை.அவளது சுதந்திரத்தை, உரிமையைப் பாதிக்கும் விடயம். இதனால்தான் என்னவோ இன்றைய இளம் பெண்கள் படித்து ஒருவாறு வேலை தேடிவிட்டு திருமணம் செய்யாது சுதந்திரக் காற்றை அதிலாவது சுவாசிக்கின்றனர் போலும். அண்மைய ஆய்வின்படி ஆசிய நாடுகளில் பெரும்பாலும் யப்பான், சீனா, போன்றவற்றில் இப்படிப் பட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுவருகின்றது.

நடுநிசியில் ஒரு பெண் எப்போது வெளியில் நடமாடமுடியுமோ அப்போதுதான் ஒரு சமுதாயம் உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுவிட்டதாகக் கூற முடியும் என்கிறார் மகாத்மாகாந்தி. இங்கு இன்றைய நிலையில் பகல் வேளையில் நடமாடுவதும்

பாதுகாப்பற்றதாகவே உள்ளது. பாலியல் வல்லுறவுகளும், பலாத்காரங்களும் தலைவிரித்தாடுகின்றன.

இதைவிட பாலியல் சேட்டைகள் , துன்புறுத்தல்கள், தொடருகின்றன. பெண்களை நடமாட முடியாதவாறே செய்துவிடுகின்றது இந்த ஆண்வர்க்கம். இடையூறு செய்தல் பற்றி மனித உரிமைகள் சட்டத்தில் தெளிவாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இவ்வாறான செயற்பாடுகள் மனித உரிமை மீறல்களே என்பதில் எவ்வித கருத்து முரன்பாடுகளும் இல்லை.

ஆசிய நாடுகளைப் பொறுத்த வரையில் இவ்வாறான உரிமைமீறல்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. சர்வதேச பெண்கள் தினம், அன்னையர் தினம், என்பன வெறும் சடங்குகளாகவோ செய்திகளாகவோ மட்டும் இராமல் ஆக்க பூர்வமாக மாறும் போதுதான் பெண் உரிமை என்றால் என்ன என்று பலருக்கு விளங்கிக் கொள்ள முடியும். அப்போதுதான் பெண்கள் தமது உரிமையை சுதந்திரமாக அனுபவிக்க முடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை. பெண்கள் உரிமைகள் மனித உரிமைகளே என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை என்பதே உறுதியான உண்மையாகும்.





## சாபம் கொடுப்பதும்
## பாவம் தீர்ப்பதும்....

ஒழுக்கம் கெட்ட பெண்
அகலிகை
ஒரு பெரும் கல்லானாள்
இந்த
இழுக்கைப் போக்க
அவளை
உயிரோடு எழுப்பியவன்
இராமன் என்பவனாம்!

இன்றும்
இந்திரன்கள் ஏராளம் !
அகலிகைகளும் அதிகம்
மிக அதிகம்.....
ஆனால்...
கௌதமர்களையும்
இராமன்களையும்தான்
காணோம்...
காரணம் என்ன?

இது விஞ்ஞான யுகம்
இந்த யுகத்தில்
இராமன்களும் கௌதமர்களும்
இல்லாமல் போய்விட்டார்கள்
ஆமாம்....
சாபம் கொடுப்பதும்
பாவம் தீர்ப்பதும்
யார் கையிலும் இல்லை !

காண்டீபன்

# மதமாற்றமா...இல்லை

மதமாற்றமா
இல்லை......
மனமாற்றமா?
எது உண்மை?
இதுதான் கேள்வி!

பணம், யாரையும்
பரமனிடம் சேர்க்காது
மனம் ஒன்றுதான்
ஒரே ஒரு மார்க்கம்!

சமய எதிர்ப்பு
சரிவராது!
அமையும் சமாதானத்தை
அது அழிக்கும்

நாத்திகனுக்கும்
நரகம் இல்லை
அவன்
நல்வழியில்
நாளும் நடந்தால்!
ஆத்திகன்
'ஆசாடபூதி'யானால்
நரகம்
அவனுக்குத்தான்
அழைப்பு விடுக்கும்!

வி
யா
ச
ன்